8.2.2021
அசல் வழக்கு எண்: 209-2016

வா.சா.1 முருகன் சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி குறுக்கு விசாரணை

எனது இடத்தில் பிரதிவாதி கட்டியுள்ளதால் அதனை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு பாத்தியப்பட்ட சொத்தில் கிழமேல், தென்வடல் அளவுகள், விஸ்தீரணம் மற்றும் நான்குமால் விபரம் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். எனக்கு 5 செண்டு அளவுள்ள நிலம் பாத்தியப்பட்டது. மேற்படி 5 செண்டு அளவுள்ள நிலம், நான்குமால் அதன் சர்வே எண் பற்றிய விபரம் எதுவும் சொத்து விபரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சொத்தின் விஸ்தீரணம் 198 1/2 சதுர அடி என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழக்கே 3 அடி எனக்கு பாத்தியம் என்பதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் உள்ளது. எனது வீட்டிற்கு வடக்கே பிரதிவாதி வீடு உள்ளது. பிரதிவாதி வீட்டிற்கு தெற்கே எனது வீடு உள்ளது. எனது வீட்டிற்கு மேற்கே 10 அடி பொது பாதை உள்ளது என்றால் சரிதான். மேற்படி 10 அடி பாதை என்பது நான் 5 அடியும், அதற்கு மேற்கே உள்ள நபர் 5 அடியும் விட்ட பாதை என்றால் சரிதான். மேற்படி 10 அடி பாதையில் பிரதிவாதியும் 5 அடி பாதைக்காக விட்டுள்ளார் என்றால் சரியல்ல. சர்வே எண்.21/4ஏ, 1ஏல் கண்ட மொத்த விஸ்தீரணம் மூக்கன் ஆசாரி மகன் சத்தியானந்தம் என்பவருக்கு ஆதியில் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சத்தியானந்தமும், அவர் மகன் முருகேசனும் சொத்துக்களை பகுதி, பகுதியாக விற்பனை செய்துள்ளனர் என்றால் சரிதான். 29.5.2001ம் தேதி 1168 3/4 சதுரஅடி நிலத்தினை சத்தியானந்தமும், அவரது மகன் முருகேசனும் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். பிரதிவாதி கிரைய பாத்தியத்தின் அடிப்படையில் அவரது சொத்தில் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி பெயரில் சர்வே எண்.21/31 என உட்பிரிவு செய்துபட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி சொத்தின் வடக்கு பக்கம் வடிவேலு மகன் பிச்சை முத்து இடம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்சமயம் பிச்சை முத்து என்பவர் குடியிருந்து வருகிறார். பிச்சை முத்து பல வருடங்களாக அங்குதான் குடியிருந்து வருகிறார் என்றும் மேற்படி விபரம் எனக்கு நன்கு தெரியும் என்று சொன்னால் 8 வருடங்களாக எனக்கு தெரியும். பிச்சை முத்து, பிரதிவாதி மற்றும் நானும் மேற்கே 10 அடி பொது பாதை அமைப்பது சம்மந்தமாக பேசி கொண்டோம் என்றால் இல்லை. நான் 5 அடி பொது பாதைக்காக விட்டுள்ளேன். வாதி, பிரதிவாதி மற்றும் பிச்சை முத்து ஆகியோர்களின் பேச்சின் அடிப்படையில் பிரதிவாதி 5 அடி பாதைக்காக விட்டுள்ளார் என்றும் நான் பாதைக்காக 5 அடி

விடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் வீடு கட்டிய காலத்தில் எனது தென்வடல் மேற்கு சுவரை 1/2 அடி மேற்கு பக்க பொது பாதையை ஆக்கிரமித்து கட்டுமானம் கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியும், பிச்சை முத்துவும் நான் செய்த ஆக்கிரமிப்பை ஆட்சேபணை செய்தனர் என்றால் இல்லை. பொது பாதையை 1/2 அடி ஆக்கிரமிப்பு செய்ததது சம்மந்தமாக நானும், பிரதிவாதியும் பிச்சை முத்து ஆகியோர்களும் 5.2.2013ம் தேதி சமரச பத்திரம் எழுதி கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் உள்ள விபரங்களை நான் படித்து தெரிந்து கொண்டுள்ளேன். மேற்படி விபரம் எதிர் வழக்குரையில் உள்ளதையும் நான் தெரிந்து கொண்டேன். எதிர் வழக்குரையை ஆட்சேபித்து பதில் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியாகத்தான் வீடு கட்டியுள்ளேன் அதனால் நான் பதில் வழக்குரை தாக்கல் செய்யவில்லை. மேற்கு பக்கம் பொது பாதையில் 1/2 அடியை ஆக்கிரமிப்பு செய்துள்ளதை ஒப்பு கொண்டு தான் 5.2.2103ம் தேதி சமரச பத்திரம் ஏற்பட்டுள்ளது என்றும்அதனால் தான் பதில் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றும் மேற்படி விபரம் தெரிந்தும் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோள்படி மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேறு வழக்கு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).